ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1646/20 - 2010 මාර්තු 24 වැනි බදාදා - 2010.03.24

*1646/20 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### துறைமுகங்கள் மற்றும் விமானச் சேவைகள் அமைச்சு

சிவில் விமானச் சேவைகள் அதிகார சபை

**196 விமான செயற்பாட்டு ஒழுங்குக் கோவையின் கீழ் சிவில் விமானச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் அறிவித்தல்**

முறையான விமானப் போக்குவரத்து சேவை (Scheduled Operations) மற்றும் வாடகை அடிப்படையிலான விமானப் போக்குவரத்து சேவை (Charter Operations) நாடெங்கும் முன்னெடுத்துச் செல்வதற்காக 1955 ஆம் ஆண்டு விமான செயற்பாட்டு சட்டத்தின் நிபந்தனைகளுக்கமைய விமான செயற்பாட்டு சான்றிதழ்/விமானக் கம்பனியின் உறுதியுரை மற்றும் வாடகை செயற்பாட்டு விமானப் போக்குவரத்து சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக இல. 03, ஆர். ஏ. டீ. மெல் மாவத்தை,கொழும்பு 05 என்னும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட செனொக் ஏவியேஷன்ஸ் சேர்விசஸ் (தனியார்) கம்பனியினால் 2010, சனவரி மாதம் 25 ஆந் திகதி கொண்ட விண்ணப்பப்படிவம் 2010, பெப்புருவரி 1 ஆந் திகதி இவ் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன். விண்ணப்பப்படிவத்திற்கமைய வரையறுக்கப்பட்ட செனொக் ஏவியேஷன்ஸ் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழ்வருமாறு அமைகிறது.

திரு. சீ. என். வீ. செல்வநாயகம்.

இக்கம்பனியின் உத்தேச விமான செயற்பாட்டு பணிகள் தொடர்பான முழுமையான பொறுப்புக்கள் கொண்ட முகாமைத்துவ பணிகளுக்காக திரு. கீர்த்தி திசாநாயக்க அவர்கள் செனொக் ஏவியேஷன்ஸ் சேர்விசஸ் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி இல. 64, காலி வீதி, கொழும்பு 3, இல் அமைந்துள்ள சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபையின் கீழ் மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் எந்தவொரு வேலை நாட்களிலும் பொதுமக்களுக்கு அலுவலக நேரத்தில் இதனைப் பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காகத் தேவையான விமான செயற்பாட்டுச் சான்றிதழ் (Air Operator Certificate), விமானக் கம்பனி சான்றிதழ் (Airline License) மற்றும் வாடகை செயற்பாட்டு விமானப் போக்குவரத்து சான்றிதழ் (Charter Operator License) உட்பட ஏனைய உரிய அங்கீகாரத்தை வழங்க முன்னர் விமான செயற்பாட்டு ஒழுங்குக் கோவையைப் போன்று உரிய சர்வதேச தரங்கள் மற்றும் ஆலோசனை செயற்பாடுகள் (International Standard and Recommended Practices)மற்றும் இந்நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இதனுடன் தொடர்புபட்ட உள்நாட்டுத் தேவைகளுக்கமைய நம்பகத் தன்மை கொண்ட, பாதுகாப்பு மிகுந்த செயற்திறன் மிக்க விமானப் போக்குவரத்துச் சேவை செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைப் பொருத்தங்கள் நிலையியற் சபை செயற்பாடுகளுக்கமைய உரியவாறு பரிசீலனை செய்து இவ்விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் 2010, ஏப்பிறல் 20 ஆந் திகதிக்குப் பின்னர் என்னால் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு நபருக்கும் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பாக எழுத்து மூல, உரிய காரணங்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்கள், விமானப் போக்குவரத்து ஒழுங்குக் கோவைகளுக்கு அமைவாக எனக்கு அறிக்கைப்படுத்த முடியும். அவ்வாறான அறிக்கைப்படுத்தப்பட்டவைகளின் உள்ளடக்கம் மற்றும் சகல வாசகங்களினதும் நம்பகத்தன்மை எழுத்துமூல சாட்சியுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும். அவ்வாறான தகவல்களை எனக்கு சமர்ப்பிக்கும் வேளையில் அவர் அதன் பிரதியை விண்ணப்பதாரிக்கு கிடைக்கச் செய்யவேண்டியதுடன் அவ்வாறு அனுப்பப்பட்டதற்கான உறுதியை உரிய தகவல் அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பராக்கிரம திசாநாயக்க,
பதில் சிவில் விமானச் சேவைகள் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமானச் சேவைகள் அதிகார சபை,
இல. 64, காலி வீதி,
கொழும்பு 3 .
2010, மாச்சு 24.

4- 255

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.